1979 ஏப்ரல் 2]

அச்சகத் துறையில் பணிபுரியும் பெண் தொழிலாளர்கள்.

குறுகிய கால வினா எண். 37—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1—7—1977-க்குப் பின் சென்னை தலைமை அச்சகத் துறையில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு அளித்த சலுகை என்ன?

(ஆ) பெண் தொழிலாளர்கள் அரசுக்குக் கோரிக்கை கொடுத்துள்ளனரா?

(இ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) அளிக்கப்பட்ட சலுகைகள்:—

1. பெண் தொழிலாளர்களுடைய வேலை நேரம் காலை 6 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை இருந்ததை, 4—8—77 தேதி முதல் காலை 9 மணி முதல், மாலை 5–30 மணி வரை என்று மாற்றியமைக்கப்பட்டது.

2. சிற்றுண்டி சாலையில் பெண்களுக்கு தனியிடம் ஒதுக்கப்பட்டது.

3. எழுது பொருள், அச்சுத்துறை பெண் தொழிலாளர் சங்கத்துக்கு அங்கீகாரம் வழங்க இயக்குநருக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(ஆ) ஆம்.

(இ) சில கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்கூறிய சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. மற்ற கோரிக்கைகளுக்குத் தகுந்த பதில் சங்கத்துக்கு அனுப்பப்பட்டுவிட்டது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, சென்னை தலைமை அச்சகத்தில் உள்ள பெண் தொழிலாளர்கள் இன்னும் சில கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. பெண் என்றால் பேயும் மனம் இரங்கும் என்பார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் அவர்கள் மீது இரக்கம் காண்பித்து, அந்தக் கோரிக்கைகளை பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, பெண்களை பேய் பிடிப்பதாகத்தான் வரலாறு இருக்கிறது. இருந்தாலும் இந்த அரசு இரக்கம் கொண்டு, விரைவில் தகுந்த பரிகாரம் காண இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்தில் 'கொத்தடிமை விடுவிப்பு' திட்டம்.

*வினா எண். 590—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் 'கொத்தடிமை விடுவிப்பு' திட்டத்தின் கீழ் பலன் பெற்றவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

தருமபுரி மாவட்டத்தில் ''கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தின்'' கீழ் விடுவிக்கப்பட்டு பலன் அடைந்தோர் 34 பேராவர்.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, இந்த கொத்தடிமை விடுவிக்கும் முறை யாரால் எப்போது கொண்டுவரப்பட்டது? அப்படி கொத்தடிமை விடுப்பு முறையினால் விடுவிக்கப்பட்டவர்களுக்கு அரசு எந்தெந்த வகையில் சலுகை அளிக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, 1975—76ல் மத்திய அரசாங்கத்தில் அப்போது பிரதம அமைச்சராக இருந்த இந்திரா காந்தி அம்மையாரால் கொண்டு வரப்பட்டது. கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு விவசாயத்திற்கு நிலம் வழங்குதல், வீடு கட்ட உதவி அளித்தல், விவசாய நிலங்களை மேம்பாடு செய்வதற்கு மற்றும் உழவுத் தொழில் செய்வதற்கு கடன் வழங்குதல், இடைக்கால நிவாரணம் வழங்குதல் இப்படிப்பட்ட உதவிகளை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, இந்த கொத்தடிமை விடுப்பு தர்மபுரி மாவட்டத்தில் எந்தெந்த பகுதிகளில் இருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டது? சித்தேரி மலை, கொத்தளம் பகுதிகளில் இருக்கிறதா? அங்கிருந்து விடுவிக்கப்பட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த பகுதிகளும் இடம் பெற்றிருக்கின்றன.